FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301639

1. District : Madurai மாவட்டம் PS: V Q AC காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 17/26 முத.அ. எண் Date: 30.10.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended Sections பிரிவுகள்: 7(a) of PC Act 1988
(ii) Act சட்டம்: by PC (Amendement) Act Sections பிரிவுகள்: as Amended by PC
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்: (Amendement) Act, 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை ① 26.10.26 at 13.30 hrs ② 26.10.26 at 18.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை ③ 28.10.26 at 14.30 hrs ④ 29.10.26 at 13.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2026 Time : நேரம் 07.55 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.10.2026 Time : நேரம் 08.40 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North East 30 kms.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o The Assistant Engineer, Melur Town, TNPDCL Near Melur Bus Stand, Madurai. Dist.,
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr.R. Arivalagan குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : Tr. Rasu தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 29.05.1988 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : INDIAN நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : UPVC windows தொழில் Manufacturing company (g) Address : முகவரி A 24, Pradhan Manthiri Awas Yojana Urban house, Karuthapuliyampatti, Melur, Madurai. Dist.,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Anand, Commerical Inspector, O/o The Assistant Engineer, Melur Town, TNPDCL, Madurai Dist.,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets attached
- pages 3-7

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Arun 30/10/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Thendral J 30/10/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 30.10.2026 09.35hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. Elam Thendral
Rank: நிலை Inspector of police
VCAC, HDU

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 30.10.2026-ஆம் தேதி காலை 07.55 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம், மேலூர், கருத்த புளியம்பட்டி, பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா அர்பன் ஹவுஸ் குடியிருப்பில் கதவு எண். A24 என்ற முகவரியில் வசிக்கும் ராசு மகன் திரு.R.அறிவழகன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் R.அறிவழகன், வயது 38/2026, த/பெ.ராசு, A24, பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா அர்பன் ஹவுஸ், கருத்த புளியம்பட்டி, மேலூர், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, மதுரை. அய்யா, நான் மதுரை மேலூரிலுள்ள பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா அர்பன் ஹவுஸ் அப்பார்ட்மென்ட்டில் குடியிருந்து வருகிறேன். அந்த அப்பாட்மென்டில் எனது மனைவி முத்துபாண்டியம்மாள் மற்றும் மூன்று பெண் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். நான் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் யுபிவிசி வின்டோஸ் மற்றும் டோர்ஸ் செய்யும் தொழிலும், மரத்தொழிலும் சொந்தமாக செய்து வருகிறேன். நான் எனது தொழிலுக்காக கடந்த ஜனவரி 2026ம் தேதி மேலூரைச் சேர்ந்த திரு. பன்னீர்செல்வம் என்பவருக்கு சொந்தமான நம்பர் 82E, சிவகங்கை ரோடு, மேலூர் என்ற முகவரியிலுள்ள சுமார் 7 சென்டிலுள்ள காலிமனையிடத்தை மாத வாடகையாக ரூ.17,000/-ற்கு பேசி அதில் கலர் ஷெட் போட்டு அதில் ஏற்கனவே இருந்த 3 கிலோ வாட் மின் இணைப்பை 19 கிலோவாட் சேர்த்து மொத்தம் 22 கிலோவாட் மின் இணைப்பிற்காக விண்ணப்பித்து அதற்கான அரசு கட்டணமாக ரூ.61,375/- செலுத்தி மின் இணைப்பு பெற்று எனது தொழிலை செய்து வந்தேன். இந்நிலையில் அந்த காலி மனையின் உரிமையாளர் திரு. பன்னீர்செல்வம் நான் ஷெட் போட்டுள்ள காலிமனையிடம் அவருக்கு தேவைப்படுவதால் என்னை காலி செய்ய சொன்னார். மேலும் நான் பெற்றிருந்த 22 கிலோவாட் மின் இணைப்பை பழையபடி 3 கிலோவாட் மின் இணைப்பாக மாற்றி தருமாறும் என்னிடம் கூறினார். அதன் காரணமாக நான் கடந்த 16.10.2026ம் தேதியன்று மேலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள டவுன் EB அலுவலகத்திற்கு சென்று அங்கேயே இயங்கி வரும் இ சேவை மையத்தில் அதற்காக விண்ணப்பிக்கச் சென்றேன். அப்போது அந்த கணினி ஆபரேட்டர், நில உரிமையாளரின் இரண்டு போட்டோ, ஆதார் கார்டு, இடத்திற்கான வரி

ரசீது ஆகியவற்றை இணைத்து விண்ணப்பத்தில் இடத்தின் உரிமையாளர் திரு. பன்னீர்செல்வத்தின் கையொப்பம் பெற்று வருமாறு என்னிடம் கூறினார். நானும் அவ்வாறே பன்னீர் செல்வத்திடம் அந்த ஆவணங்களைப் பெற்று விண்ணப்பத்தில் அவரிடம் கையொப்பம் பெற்று மீண்டும் அதே இசேவை மையத்திற்கு சென்று கொடுத்தேன். அவர் அதற்குரிய கட்டணமாக ரூ.385/-ஐ என்னிடம் பெற்றுக்கொண்டு அதற்கு ரசீது கொடுத்துவிட்டு நான் கொடுத்திருந்த ஆவணங்களை என்னிடம் கொடுத்து, வணிக ஆய்வாளர் திரு. ஆனந்த் என்பவரிடம் கொடுக்குமாறு சொல்லி திரு.ஆனந்த அவர்களின் கைபேசி எண். 8838900706 என்ற எண்ணை கொடுத்து அவரிடம் பேசச் சொன்னார், நானும் சுமார் மதியம் 2 மணிக்கு திரு.ஆனந்த் அவர்களை எனது கைபேசி எண். 9600700071 என்ற எண்ணிலிருந்து பேசி எனது கோரிக்கையை சொன்னேன், அவர் என்னை அந்த அலுவலகத்தின் மாடிக்கு வரச்சொன்னார். நானும் அவ்வாறே திரு. ஆனந்திடம் கொண்டு போய் கொடுத்தேன். அதனைப் பெற்றுக்கொண்ட ஆனந்த் இது பெரிய பிராசஸ் தம்பி, நான் இடத்தை இன்ஸ்பெக்சன் செய்ய வருவேன். அதன் பிறகு என்ன செய்யவேண்டும் என சொல்கிறேன் என கூறி என்னை அனுப்பினார். அதன்பிறகு கடந்த 23.10.2026-ம் தேதியன்று மதியம் சுமார் 12 மணிக்கு திரு. ஆனந்த் எங்கள் இடத்திற்கு வந்து இன்ஸ்பெக்சன் செய்ய வந்துள்ளார் என்று இடத்தின் உரிமையாளர் அவரது போனிலிருந்து எனக்கு தகவல் தெரிவித்து என்னை அங்கு வரச்சொன்னார். அதன்படி நான் அவ்விடத்திற்கு சென்றேன். அப்போது என்னிடம் மெஷினை ஓட்டினீர்களா என ஆனந்த் கேட்டார். நான் ஆமாம் சார் என்னுடைய தொழிலே அதுதானே சார் என கூறினேன். அதற்கு அவர் ரூல்ஸ் தெரியாதா, அப்படியெல்லாம் ஓட்டக்கூடாது, அதற்கு அவர் சரி உன் போன் நம்பர் கொடு நான் போனில் பேசுகிறேன் என கூறி என் செல்போன் நம்பர் 9600700071ஐ குறித்துக்கொண்டும், ரீடிங் எடுத்துக்கொண்டும் கிளம்பிவிட்டார். பின்னர் நான்கு நாட்கள் கழித்து கடந்த 26.10.2026ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் எனது போன் நம்பரில் திரு.ஆனந்த் அவரது மொபைல் நம்பர் 88389 00706 லிருந்து தொடர்பு கொண்டு அவரை அறிமுகம் செய்து கொண்டு என்னை அவரது அலுவலகத்திற்கு நேரில் வரச்சொன்னார். நான் மதியம் சுமார் 1½ மணிக்கு மேலூர் EB அலுவலகம் சென்று அவரை சந்தித்தேன். அப்போது அலுவலகத்தில் சில வெளி நபர்கள் இருந்தார்கள். உடனே ஆனந்த் என்னிடம் கொஞ்சம் காத்திருங்கள் என்று கூறினார். சற்று நேரம் கழித்து அவர்கள் சென்ற பிறகு என்னை வெளியில் கதவிற்கருகில்

கூட்டிச்சென்று நீ மெஷினை ஓட்டிவிட்டாயப்பா, அதனால் கிலோவாட் கூடியிருக்கு, அதனை அவ்வளவு எளிதில் மாற்ற முடியாது, அதனால் நீ ரூ.7,000/- ரெடி பண்ணி கொண்டு வந்து என்னிடம் கொடு, நான் உனக்கு அதனை மாற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார் அப்போது, நான் அவரிடம் இது அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணமா எனக்கேட்டேன். அதற்கு திரு.ஆனந்த் அவர்கள் கிலோ வாட் அதிகப்படுத்த எனக்கு அதிகாரம் உள்ளது தம்பி ஆனால் அதனைக் குறைப்பதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. நான் இன்ஸ்பெக்சன் செய்து உயர் அதிகாரிகளுக்கு அனுப்புவேன். உயர் அதிகாரிகள் தான் கிலோவாட்டை குறைத்து இணைப்பு மாற்றி வழங்கவேண்டும், நீ ரூ.7,000/- ரெடி பண்ணி என்னிடம் கொடுத்தால் உயர் அதிகாரியிடம் நானே பேசி உங்களுக்கான வேலையை முடித்து தருகிறேன், உன் மெஷின் பக்கமே யாரும் வரமாட்டார்கள் என என்னிடம் கூறினார். நானும் பார்க்கலாம் சார் என கூறிவிட்டு வந்துவிட்டேன். அன்று மாலை சுமார் மாலை 6 மணிக்கு திரு.ஆனந்த் அவர்கள் எனது போனில் தொடர்பு கொண்டு பேசி, அவர் சொன்னபடி பணம் ரூ.7,000/- ரெடி பண்ணி கொடுத்தால்தான் உங்களது வேலை சுலபமாக முடியும் எனக் கூறினார். நானும் பார்க்கிறேன் என்று கூறினேன். அதன்பின்னர், திரு.ஆனந்த் அவர்கள் அரசு வேலைக்கு, லஞ்சமாக பணம் கேட்பது எனக்கு மிகுந்த மனவருத்தமாக இருந்தது. எனவே நான் அன்றைய தினமே 26.10.2026 தமிழக அரசு அறிவித்திருந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு வாட்ஸ் அப் எண் : 94981 80936-க்கு மேற்படி வணிக ஆய்வாளர் திரு.ஆனந்த் லஞ்சமாக ரூ.7,000/- கேட்ட விபரத்தை புகார் செய்தேன். அதன் பேரில் மதுரை ஊ.த.க பிரிவு பெண் காவல் ஆய்வாளர் என்னை தொடர்பு கொண்டு விபரம் கேட்டு அது தொடர்பான ஆவணங்களை எடுத்து கொண்டு அவரது அலுவலகத்திற்கு வருமாறு தெரிவித்தார். நான் வருவதாக கூறினேன். பின்னர் கடந்த 28.10.2026-ம் தேதி மதியம் சுமார் 2 ½ மணிக்கு வணிக ஆய்வாளர் திரு.ஆனந்த் அவர்களை நான் போனில் அழைத்து மீண்டும் ஒரு முறை எனது விண்ணப்பம் குறித்து கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் அவர் கேட்டிருந்த பணம் ரூ.7,000/-யை கொண்டு சீக்கிரம் வருமாறு கூறினார். ஆனால் நான் அவரிடம், பணம் ரெடி பண்ண முடியவில்லை சார் என கூறினேன். அதற்கு அவர் விரைவில் ரெடி செய்து கொண்டு வாப்பா என என்னிடம் கூறினார். பின்னர் நேற்று (29.10.2026) நான் நேரில் திரு.ஆனந்த் அவர்களை சந்தித்து விண்ணப்பம் குறித்து கேட்கலாம் என நினைத்து அவரது அலுவலகம் சென்றேன். ஆனால் அவர் அங்கு இல்லை. எனவே நான் திரும்பி

வரும்போது மதியம் சுமார் 12 ¼ மணிக்கு ஆனந்த் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல் போன் எண்ணில் என்னை தொடர்பு கொண்டு என்னை அவரது அலுவலகத்திற்கு நேரில் வரச்சொன்னார். அப்போது நான் வேலையாக இருந்ததால், மதியம் சுமார் 1 ½ மணிக்கு அவரது அலுவலகம் சென்று அவரை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் அவர் கேட்ட பணம் ரெடி பண்ணி விட்டாயா என கேட்டார். அதற்கு நான் அவரிடம், எனக்கு திடீர் செலவு வந்துவிட்டதால் பணம் செலவாகிவிட்டது, பணம் இல்லாமல் எனது வேலையை முடித்து தர முடியுமா என கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் கோபமாக ரூ.7,000/-யை கொண்டு வந்து கொடுத்தால் எனது 22 கிலோ வாட் மின் இணைப்பை 3 கிலோ வாட் மின் இணைப்பாக மாற்றி தர ஏற்பாடு செய்வேன், இல்லை என்றால் நீ அலைந்து கொண்டு தான் இருக்க வேண்டும் என கறாராக கூறிவிட்டார். அரசாங்க வேலை செய்வதற்கு லஞ்சம் கொடுத்து எனது வேலையை முடித்து கொள்ள எனது மனம் விரும்பாமல் புகார் கொடுக்க முடிவு செய்தேன். எனவே, 22 கிலோவாட் மின் இணைப்பை மாற்றி பழைய நிலைக்கு அதாவது 3 கிலோவாட் மின் இணைப்பாக மாற்றி தருவதற்காக ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் ரூ.7,000/-லஞ்சமாகக் கேட்ட வணிக ஆய்வாளர் திரு.ஆனந்த் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகார் மனுவுடன்,1) கடந்த 28.01.2026-ம் தேதியன்று நானும் திரு.பன்னீர் செல்வம் அவர்களும் செய்துகொண்ட காலிமனையிடம் வாடகை ஒப்பந்த பத்திரம், 2) கடந்த 03.02.2026ம் தேதி செலுத்திய ரூ.61,375/- ற்கான ரசீது மற்றும் 3) நான் 16.10.2026ம் தேதி ரூ.385/- செலுத்தியதற்கான ரசீது, 22 கிலோவாட்டாக மாற்றுவதற்கான ஆவணங்களின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும் வணிக ஆய்வாளர் திரு. ஆனந்த் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.7,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX** (R.அறிவழகன்) 30/10/2026.

Sir, Received the typed complaint today on 30.10.2026 at 07.55 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-

Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 17/2026, u/s. 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.40 hrs and took up investigation. Sd./-XXXXXX (B. Elam Thendral) 30.10.2026, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.R.Arivazhagan, S/o.Rasu, Door No. A24, Pradhan Mantri Awas Yojana Urban House, Karutha Puliyampatti, Melur, Madurai District along with Photo copies of Vacant site Rental agreement dated: 28.01.2026 executed between Complainant Tr.Arivazhagan and Land owner Tr. Panneer Selvam, Electricity Payment receipt No. 200051100226121, dated: 03.02.2026 in the name of Tr. Panneer Selvam and Electricity Payment receipt No. 2000511010261265, dated: 16.10.2026 are herewith enclosed and submitted to the Hon'ble Special Court for Trial of cases under the Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

Thendral 30/10/26

(B. Elam Thendral)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.